தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்,
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
நிகரி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

ஓ.மு. எண்.1403/ ஊராட்சி / 2018
நாள்: 16.10.2018

திரு. வெ. உதயகுமார்,
1/12, தெற்கு தெரு,
ஆண்டியேந்தல்,
டி. வேலாங்குடி அஞ்சல்,
திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – மனுதாரர்.

1. நரிக்குடி கிராம வட்டார வளர்ச்சி அலுவலர்,
2. கிராம ஊராட்சி எழுத்தர்,
ஆண்டியேந்தல் கிராம ஊராட்சி – எதிர் மனுதாரர்கள்.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், ஆண்டியேந்தல் கிராமத்தில் வசிக்கும் திரு. வெ. உதயகுமார் என்பவர் அவருடைய 10.10.2018 நாளிட்ட மனுவில் நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், ஆண்டியேந்தல் கிராம பஞ்சாயத்து வரவு மற்றும் செலவு கணக்குகள் சரியாக பராமரிக்கப்படவில்லையெனவும், ஆண்டியேந்தல் ஊராட்சிக்கான பசுமை வீடு திட்டக் கணக்கு நரிக்குடி – இந்தியன் ஒவர்சீஸ் வங்கியில் நடப்பு கணக்காக உள்ளது என்றும், அதனால் அப்பணத்திற்கு வட்டி ஏதும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து, இதுகுறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க வழிவகை இல்லை. எனவே,

இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2018 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 16 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

திரு. செ. உதயகுமார்,
1/12, தெற்கு தெரு,
ஆண்டியேந்தல்,
டி. வேலாங்குடி அஞ்சல்,
திருச்சுழி வட்டம்,
விருதுநகர் மாவட்டம் – 626612

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விருதுநகர் மாவட்டம்,
   விருதுநகர் (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்.
3. உதவிபிரிவு அலுவலர் (பஞ்சாயத்து).
4. செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர்.